DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.104/2020**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.3

Defence

Court

Name : பாண்டியன்
Father/ Husband Name : கருப்பையா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.02.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் கல்லமணக்குடியில் குடியிருந்துக வருகிறேன். சமையல் வேலை மற்றும் விவசாய வேலை பார்த்து வருகிறேன். எனக்கு 5வது எதிரி நீலவேணியின் மாமா கணேசன் என்பவரை தெரியும். மேற்படி கணேசன் என்பவர் என்னை 1வது எதிரி கணேசன் மற்றும் 5வது எதிரி நீலவேணிக்கு நடந்த திருமணத்திற்கு என்னை அழைத்தார். மாலையிட்டான்வயலில் நான் திருமணத்திற்கு சென்றேன். அங்கு இந்து முறைப்படி மாலைமாற்றி தாலி கட்டி 1வது எதிரி கணேசன் வீட்டில் திருமணம் நடந்தது.

2. நானும் திருமணத்தில் கலந்துகொண்டேன். திருமணத்தில் 2வது எதிரி ராமநாதன், 3வது எதிரி சிகப்பி, 4வது எதிரி அனிதா, 6வது எதிரி அஞ்சலிதேவி ஆகியோர்கள் கலந்துகொண்டார்கள். மேற்படி திருமணம் 03.03.2019ம் தேதி நடந்தது. பின்னர் 6,7 மாதங்கள் கழித்து புதுவயலில்

புகார்தாரரின் தகப்பனார் கருப்பையாவை பார்த்தேன். அவருடன் எதார்த்தமாக 17.10.2019ம் வந்து பேசும்போது அவர் மாலையிட்டான்வயலை பற்றி பேசிக்கொண்டிருந்தார்.

3. பின்னர் எனக்கு புவனேஸ்வரிக்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது எனக்கு தெரியவந்தது. 2வது திருமணம் கணேசன் என்பவர் செய்துகொண்டதை தெரிந்துகொண்டேன். அப்போது கருப்பையா என்பவர் எனது மகள் புவனேஸ்வரியை தான் 1வது எதிரி திருமணம் செய்துகொடுத்துள்ளேன் என்று சொன்னார். அதன்பின்னர் புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் புகார் கொடுத்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொன்னதால் குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது:**

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.